[1982 பிப்ரவரி 10

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் சொல்லிய முறைப்படி பல இடங்களில் முன்சீப் கோர்ட்டுகளில் அதிகாரிகள் நியமிக்கப்படுவதில்லை செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்ஸ் பஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்களாக ஆக முடியாத அளவுக்கு பல்வேறு இடங்களில் அவல நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? உயர்நீதி மன்றத்தில் அங்கிருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் மற்ற சவுகரியங்கள் கிடைக்காமல் போய் விடுகிறது என்று சொல்லுகிறார்கள் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதில் உண்மையான நிர்வாகத்தில் இருக்கும் அவல நிலையை எடுத்துச் சொல்லி தீர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அந்த நிலை இருந்த நிலைதான் 31 இடங்கள் செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களிலும் ஆறு இடங்களில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் நீதிமன்றங்களிலும் நீதிபதி இல்லாத நிலை எடுத்துச் சொல்லப்பட்டது. உயர்நீதி மன்றம் 1965-ல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்ஸ், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிகள் ஆகியவற்றுக்கு 11:9 என்ற ரேஷியோவில்—அதாவது 11 பேர் வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றால் 9 பேர் நிர்வாகத் துறையில் இருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற விதி இருந்தது. ஆனால் 1965-ல் இருந்து வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து யாரையும் தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. தற்போது அந்த நிலையை மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு வழக்கறிஞர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டும் வகையில் 5:1 என்ற விகிதத்தில்—அதாவது 5 பேர் வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து நியமிக்கப்பட்டால் ஒருவர் மட்டும் நிர்வாகத் துறையில் இருந்து நியமிக்கப்பட வேண்டுமென்ற முறையில் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த ஒருவரும் உயர்நீதிமன்றத்தில் பணியாற்றுகிறவர்களாக, சட்டத் துறையில் பணியாற்றுகிறவர்களாக இருக்கவேண்டுமென்றும் சட்டப் பயிற்சி இருப்பவர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் அரசு உத்தரவிட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திற்கு இதை விளக்கிச் சொன்ன பிறகு 31 நீதிமன்றங்களில் காலியாகியிருக்கும் இடங்களிலும், ஆறு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளிலும் இந்த முறையில் நியமனம் செய்ய வேண்டுமென்று அரசு கூறியிருக்கிறது.

பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம்.

*வினா எண் 129— திரு. என். நிஜயபாலன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்களில் நடைமுறைப்படுத்தப் படுகிறது?

1982 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் 1979–80 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும் 1980-81 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும் கும்பகோணம் வட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

***வினா எண். 130— திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: திரு. பொ விஜயராகவன்: திரு. து. புருஷோத்தமன்:**

மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த அடிப்படையில் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். விஜயபாலன்: இத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? இத் திட்டத்திற்காக அரசுக்கு ஆகும் செலவுத் தொகை எவ்வளவு?

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1979–80 இல் இத் திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்கள் 6,965 பேர்கள். இன்சூரன்ஸ் செய்த நிலத்தினுடைய பரப்பளவு 12,566 ஏக்கர்; அதே போல் இன்சூரன்ஸ் செய்த தொகை 72,34,272 ரூபாய். 1980 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் 2,734 பேர்கள் இதன் மூலம் பயன்பெற்றிருக்கி கிறார்கள். அதிலே ஈட்டுத் தொகையாக 4,51,260 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1979ஆம் ஆண்டைப் பொறுத்தவரைக்கும் 28,52,855 ரூபாய்க்கு பயிர் இன்ஷூரன்ஸ் செய்யப் பட்டிருக்கிறது.

திரு. இ. முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டமானது தஞ்சை மாவட்டத்தைத்தவிர ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

---

* 339–341-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.